**சார்பு நீதிமன்றம், மன்னார்குடி**

**OS 131/2017**

**27.11.2025.**

**PW- 1**

**வா.சா.1. முகம்மது பாதுஷா, த/பெ. முகம்மது யூனஸ் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 1,3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1ம் வாதி எனது சகோதரர் என்றால் - சரிதான். அவருக்கும் சேர்த்துதான் நான் சாட்சியம் அளிக்கிறேன். அவரை விசாரிக்க தேவையில்லை. இருவரும் ஒன்றாக குடியிருக்கிறோமா என்றால் - தனித்தனியாக குடியிருக்கிறோம். எதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் - எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் சொத்தை ஒப்படைக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். காசிநாதன் என்பவர் ஆக்கிரமித்துள்ளார். வழக்கு தாக்கல் செய்வதற்கு எவ்வளவு நாட்களுக்கு முன்பு ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் - 2016 ம் ஆண்டிலிருந்து ஆக்கிரமிப்பு செய்து வருகிறார். அதற்கு முன்பு தாவா சொத்து யார் அனுபவத்தில் இருந்தது என்றால் - எனது அனுபவத்தில் இருந்தது. எனது அனுபவத்தில் தாவா சொத்து இருந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் - ஆவணம் இருக்கிறது ஆனால் தாக்கல் செய்யவில்லை. என்ன சர்வே எண் என்றால் - 64. எனக்கு சொந்தமானது 64/1 பி ஆகும். எனது சகோதரருக்கும் அதே நம்பர் தான். நான் கிரயம் வாங்கியது 64/1 பி என்ற சர்வே எண்ணைதான் வாங்கினேன் என்றால் - நான் கிரயம் வாங்கும்போது அதன் சர்வே எண். 64/1 ஆகும். சர்வே எண். 64/1 எண்ணில் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் - 1 ஏக்கர் 83 செண்ட் ஆகும். சர்வே எண். 64/1 ல் மொத்த விஸ்தீரணம் 3 ஏக்கர் 56 செண்ட் என்றால் - சரியல்ல. 64 ல் தான் 3 ஏக்கர். 3 ஏக்கர் 56 செண்ட் தான் காசிநாதன் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் - ஆக்கிரமிப்பிற்கு பிறகு அவர் அனுபவம் செய்து வருகிறார். கிட்டு கிளாக்குடையார் என்பவர் நிலத்திற்கு கிழக்கு குறிப்பிட்டுள்ளதில் கிட்டு என்பவர் 4 ம் பிரதிவாதியின் தாத்தா. கிட்டு என்பவர் காசிநாதனின் தகப்பனார் என்றால் - சரிதான். காசி கிளாக்குடையார் தான் அவரது தாத்தா. காசிநாதன் எவ்வாறு எனது சொத்தை ஆக்கிரமிப்பு செய்தார் என்றால் - அவரது குடும்ப சொத்து என்று ஆக்கிரமிப்பு செய்துள்ளார். தாவா சொத்தில் என்னென்ன உள்ளது என்றால் - தரிசாக இருக்கிறது. தாவா சொத்தை நான் எப்போது பார்த்தேன் என்றால் - 2017 ல் பார்த்ததுதான் அதன்பிறகு பார்க்கவில்லை. அதற்கு முன்னர் தாவா சொத்து எந்த நிலையில் இருந்தது என்று எனக்கு தெரியும். வழக்கு சொத்தில் காசிநாதன் குளம் வெட்டியுள்ளது எனக்கு தெரியுமா என்றால் - நான் பார்க்கவில்லை. மற்ற பகுதி குளத்திலிருந்து எடுத்த மண் மூலமாக திடலாக உள்ளது என்றால் - தெரியாது. எனக்கு மேற்படி விவரம் தெரியும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் - சரியல்ல. நான் பார்க்கவில்லை. எனது வழக்குரையில் தாவா

சொத்து நஞ்சை நிலம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் - சரிதான். எனது வழக்குரையில், 10.08.2012 ல் காசிநாதன் பெயரில் ஒரு பாகப்பத்திரம் ஏற்பட்டுள்ளதாக சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். அந்த பாகப்பத்திரத்திலும் தாவா சொத்து காசி கிளாக்குடையாருக்கு சொந்தமான பூர்வீக சொத்துக்கள் என்று தான் குறிப்பிடப்பட்டு பாகப்பிரிவினை செய்யப்பட்டுள்ளது என்றால் - சரிதான். எனது வழக்குரையில் பாகப்பத்திரம் செல்லாது என்று கேட்கவில்லை என்றால் - சரிதான். வழக்கிற்கு முன்பு காசிநாதன் குடும்பத்திற்குள் குடும்ப சொத்துக்கள் குறித்து அவ.எண். 100/2013 என்ற வழக்கு இந்நீதிமன்றத்தில் நடந்தது தெரியுமா என்றால் - எனக்கு தெரியாது. எனக்கு அந்த வழக்கு விவரம் தெரியும் என்றும் அந்த வழக்கை தெரிந்துக்கொண்டுதான் இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் - சரியல்ல. நான் யாரிடம் கிரயம் வாங்கினேன் என்றால் - கோவிந்தராஜிடமிருந்து எனது சகோதரரும் சத்யா என்பவரிடமிருந்து நானும் வாங்கியுள்ளோம். சத்யாவிற்கும் கோவிந்தராஜிற்கும் தாவா சொத்து எவ்வாறு கிடைத்து என்று தெரியுமா என்றால் - அவர்கள் சரோஜா என்பவரிடமிருந்து வாங்கியுள்ளார்கள். வருடம் தேதி ஞாபகம் உள்ளதா என்றால் - தேதி ஞாபகம் இல்லை. வருடம் 2005 ல் வாங்கியுள்ளார்கள். தாவா சொத்து ஏற்கனவே ராஜகோபால் பத்தர் என்பவருக்கு சொந்தமாக இருந்து அதன்பின்னர் தான் மேற்கண்ட நபர்கள் வாங்கி அவர்களிடமிருந்து நானும் எனது சகோதரரும் வாங்கியுள்ளோம் என்று வாதுரையில் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். ராஜகோபால் பத்தருக்கு 1.89/2/3 ஏக்கர் தான் சொந்தமாக இருந்தது என்றால் - சரிதான். எனது வழக்குபடி, ராஜகோபால் பத்தருக்கு இதே புல எண்ணில் இருக்கும் பாக்கி சொத்திற்கும் ராஜகோபாலுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் - சரிதான். ராஜகோபால் பத்தருக்கோ அவர் வாங்கியதாக சொல்லும் நபருக்கோ தாவா சொத்து பாத்தியப்பட்டது இல்லை என்றால் - சரியல்ல. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் சர்வே எண். 64/1 ல் மொத்தம் 3 ஏக்கர் 56 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அந்த ஆவணம் 1957 ல் ஆகஸ்ட் மாதம் 27 ம் தேதியன்று ஏற்படுத்தப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் - சரிதான். அதே ஆவணத்தில், காசி கிளாக்குடையாருக்கு திருஞானசம்மந்தம் என்பவர் பெந்தக கடனாக எழுதிக்கொடுத்தது என்று காட்டப்பட்டுள்ளது என்றால் - என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் அவ்வாறு தான் உள்ளது. அந்த **ஆவணம் பி.வா.சா.ஆ.1** ஆகும். பி.வா.சா.ஆ.1 க்கு பிறகு பிரதிவாதிகள் குடும்பத்தில் 13.05.1959 ம் தேதியன்று ஒரு பாகப்பத்திரம் ஏற்பட்டதாக தான் எதிர் வழக்குரையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் - நான் எதிர் வழக்குரையை படித்து பார்க்கவில்லை. பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றாலும் எதிர் வழக்குரையை படித்து பார்த்துவிட்டு எனது பிரமாண பத்திரத்திலும் எதிர் வழக்குரையில் சொல்லியுள்ள சங்கதிகள் பொய் என்று சொல்லியுள்ளேன் என்றால் - சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி காசி கிளாக்குடையார் அதன்பிறகு அவரது மகன் கிட்டு கிளாக்குடையாருக்கு சொந்தமான சொத்து என்றால் - சரியல்ல. எனது வழக்குரையில் சொல்லியுள்ளவாறு 1961 ல் ஏற்பட்ட ஆவணங்கள் அனைத்தும்

பி.வா.சா.ஆ.1 க்கு பிற்பாடு ஏற்பட்டதால் அது பொய்யான ஆவணம் என்றும் அந்த சொத்திற்கும் இந்த வழக்கு சொத்திற்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என்றால் - சரியல்ல. எனது தரப்பில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்கள் மோசடியான ஆவணங்கள் மற்றும் செல்லாத ஆவணங்கள் என்றால் - சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் கிட்டு கிளாக்குடையார் அனுபவத்தில் இருந்து 2012 ல் பிரதிவாதிகளுக்குள் பாகப்பிரிவினை ஏற்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் - பிரதிவாதிகள் அப்படிதான் சொல்லியுள்ளார்கள். வழக்கு சொத்தை நானோ எனக்கு கிரயம் செய்துக்கொடுத்த சரோஜாவோ, சரோஜாவிற்கு கிரயம் கொடுத்த நபர்களுக்கோ எந்தவித உரிமையும் அனுபவமோ இல்லை என்றால் - சரியல்ல. நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்றை பார்த்தேனா என்றால் - பார்த்தேன். கிரயம் வாங்குவதற்கு முன்பு பார்த்தேன். தேதி ஞாபகம் இல்லை. வில்லங்க சான்றை பார்த்த 1 வாரத்தில் கிரயம் வாங்கினேன். எனது வழக்குரையில் வில்லங்க சான்றை பார்த்ததாகவும் அதில் எந்தவொரு வில்லங்கமும் இல்லை என்பதையும் நான் சொல்லவில்லை என்றால் - சரிதான். வில்லங்க சான்றை நான் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் - சரிதான். வில்லங்க சான்றை பார்த்திருந்தால் வழக்கு சொத்தை கிரயம் வாங்கியிருக்க மாட்டேன் என்றால் - சரியல்ல. மோசடியான ஆவணத்தை ஏற்படுத்தவேண்டும் என்பதற்காக வில்லங்க சான்றை பார்க்காமல் ஆவணத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் - சரியல்ல. எனது பெயரிலும் எனது சகோதரர் பெயரில் ஏற்படுத்தப்பட்ட 22.10.2010 மற்றும் 28.11.2011 ஆகிய தேதிகளில் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் கிரய ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றாலும் அது மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணங்கள் என்றாலும் - சரயில்ல. மேற்படி ஆவணங்களின் படி தாவா சொத்து எனக்கும் எனது சகோதரருக்கும் சொந்தமானது அல்ல என்றால் - சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எனது வழக்குரையில், 2 வது வரிசை சொத்தில் அதன் புல எண். 64/1 பி என்று கையால் எழுதியது யார் என்றால் - தெரியாது. யார் எழுதியது என்பதற்கான சுருக்கொப்பம் இல்லை என்றால் - சரிதான். சொத்து விவரமே தவறு என்றாலும் மோசடியாக சொத்து விவரத்தினை திருத்தம் செய்துள்ளேன் என்றால் - சரியல்ல.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது).**

என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப்பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

ஒம்/- எஸ். முத்துராமன்,
சார்பு நீதிபதி,
மன்னார்குடி.